சுமங்கள ஸ்தோத்ர சீரீஸ் : 7

சனி பகவான்

(ஆராதனை முறை, அஷ்டோத்தர சத நாம அர்ச்சனை, கவசம், மந்திரம், காயத்ரி, புராண வரலாறுகள் அடங்கியது)

ஐந்தாம் பதிப்பு 1995] [விலை : ரூ. 3-00

கடலங்குடி பப்ளிகேஷன்ஸ்
38, நடேச அய்யர் தெரு,
தி. நகர் (பஸ் ஸ்டாண்ட் அருகில்)
சென்னை - 600 017 (INDIA.)

எமது இதர நூல் வெளியீடுகள்

1. நவக்கிரக ஆராதனை
2—10. ஒன்பது நூல்கள் ஒன்பது கோள்கள்
11. விவாக மந்திரங்கள் எதற்காக?
12. சிறப்புத் திருத்தலங்கள்
13. ஜோதிர்லிங்கங்கள் *(பன்னிரண்டு)*
14. மகான்களின் வாழ்வும் வாக்கும்
15. பதஞ்சலி யோக ஸூத்ரம்
16. தைத்திரீய ஆரண்யகம் *(சூரிய நமஸ்காரம்)*
17—28. சுபமங்கள ஸ்தோத்ரம் *(12 வால்யூம்கள்)*
29—33. நாராயணீயம் *(5 வால்யூம்கள்)*
34. உங்களுடைய இறப்பும் பின் பிறப்பும்
35. திருமணம்
36. சாஸ்திரமும் மழையும்
37. உழைப்பின் உயர்வில் வாழ்வு
38. தன் மதிப்பை உயர்த்த வழிகள்
39. சகோதரிகளுக்கு
40. சினேகம் சிறக்கச் சிந்தனைகள்
41. இயற்கை வைத்தியம்
42. பாரதி கண்ட புதுமைப்பெண்
43. கண்களும் அதன் பாதுகாப்பும்
44. ஜோதிட அனுபவ ஆராய்ச்சிக் கட்டுரைகள்
45. ஜாதகமும் உங்கள் தொழிலும்
46. உங்கள் ஆயுளை அறியவேண்டுமா?
47. பராசரஸம்ஹிதை
48. ஜாதக பலதீபிகை
49. ஜாதகதத்துவம்
50—52. ஸாராவளி *(மொத்தம் 3 பாகங்கள்)*
53—55. ஜாதகத்வாதச பாவபலநிர்ணயம் (3 Vols)
56. புத்திர பாவத்தை அறிய வேண்டுமா?
57. பிருஹத் ஜாதகம்
58. உடுதசா பலன் *(தசாபுக்திகளின் பலன்களுடன்)*
59. உங்கள் நட்சத்திரம்
60. ஸர்வார்த்த சிந்தாமணி
61. கோசரபலநிர்ணயம்
62. சகுனங்கள் என்ற சகுனபல நிர்ணயம்
63. நஷ்ட ஜாதகம்
64. ஸ்திரீஜாதகம்
65. யோகங்கள் பலவிதம்
66. அங்கவித்யா என்ற அங்க ஆருடம்
67. ஜோதிடமும் உங்கள் ஆரோக்கியமும்
68. ஜோதிடமும் சமையற்கலையும்
69. தமிழ் அறுபது ஆண்டுகள்
70. ஜாதகசந்திரிகை (திருமணப் பொருத்தம்)
71. ஜாதகாலங்காரம் (Vols I & II)
72. அஷ்டகவர்க்கம்

உ
ஸ்ரீராமஜெயம்

சனி பகவான்

மற்றக் கிரஹங்களை விடச் சனி பகவான், உலகத்து மக்களுக்குப் பெரிதும் தெரிந்த கிரஹம். ஏழரை ஆண்டுச் சனி என்றால் எல்லோருக்கும் திகில் தான். ஒரு ராசியில் இருந்து அடுத்த ராசிக்குச் செல்ல, சனிக்கு இரண்டரை ஆண்டுகள் ஆகின்றன. கிரஹங்களின் சஞ்சார காலங்களில் சனியின் சஞ்சாரம் தான் அதிக ஆண்டுகள்.

ஒவ்வொரு ஜாதகத்திலும் சந்திரன் இருக்கும் இடம் ராசியாகும். அந்த ராசிக்கு முன் ராசியில் இரண்டரை ஆண்டு; சந்திரன் இருக்கும் ஜன்ம ராசியில் இரண்டரை, அடுத்த ராசியில் இரண்டரை ஆண்டு: ஆக மொத்தம் ஏழரை

ஆண்டுகள். இதற்கிடையில் சனி வக்கரித்துக்கொண்டு, சஞ்சாரம் செய்த ராசிக்கே பின்னோக்கிச் செல்வதும் உண்டு. வக்கிரச் சனியின் சஞ்சார காலம், மொத்த ஆண்டுகளில் சேராமல், தனியாகவும் இருப்பதுண்டு. அப்படிப் பார்த்தால் ஏழரை ஆண்டுகளுக்கு மேலும் ஆகும். சனியின் முதல் சுற்று முடிந்து இருபத்து இரண்டரை ஆண்டுகள் கழித்து அடுத்த சுற்றுத் தொடங்கும்.

இரண்டாவது சுற்றைப் பொங்கு சனி என்றும், அந்தச் சமயத்தில் ஏழரைச்சனியின் தொந்தரவு அதிகம் இருக்காது என்றும் சொல்வார்கள். பிறக்கும்போது சொந்த உச்சவீட்டில் சனி அமைந்திருந்தால் இரண்டாவது சுற்றில் செல்வம் பொங்குமாம். சனியின் சிறப்பைக் குறிக்கும் வகையில் கோயில்களில் நவக்கிரகங்களுடன் சனி இருந்தாலும் தனியாகவும் சனி பகவானின் சந்நிதி இருக்கும்.

சூரியனுக்கும் சாயாதேவிக்கும் புதல்வனாகப் பிறந்தவன் சனி பகவான். சூரியன் துவஷ்டாவின் பெண்ணாகிய ஸஞ்ஞிகையை மணந்திருந்தான். வைவஸ்வத மநு, யமன், யமுனை என்ற குழந்தைகள் பிறந்தார்கள். சூரியனுடைய வெப்பத்தைத் தாங்கமுடியாமல் ஸஞ்ஞிகை சூரியனுக்குத் தெரியாமல் தன் நிழலையே பெண்ணுருவாகச் செய்து, சூரியனுடன் வசிக்கும்படி சொல்லி விட்டு தன் தகப்பனாரிடம் சென்று விட்டாள். ஸஞ்ஞிகையின் வேண்டுகோளின் படியே தான் வேறு ஒருத்தி என்பதைக் கூறாமல் சூரியனுடன் வாழ்ந்து வந்தாள் சாயாதேவி. அவளுக்கும் மூன்று குழந்தைகள் பிறந்தனர். சாதர்ணீ என்ற மநு, சனி பகவான், பத்திரை என்ற பெண் ஆக மூன்று குழந்தைகள்.

தனக்குக் குழந்தைகள் பிறந்ததும் ஸஞ்ஞிகையின் குழந்தைகளைக் கொடுமைப்படுத்தத் தொடங்கினாள். இதை அறிந்த யமன் சாயாதேவியை மிரட்டி உதைக்கப்போனான் "உன் கால்முறியட்டும்" என்று சாபமிட்டாள் சாயாதேவி. இந்தச் சந்தர்ப்பத்தினால் சூரியன் உண்மையை உணர்ந்தான். மீண்டும் போய்த் தவம் செய்து கொண்டிருந்த ஸஞ்ஞிகையை வேண்டி அழைத்து வந்தான் சூரியன்.

சூரியனின் அலட்சியத்தைக் கண்ட சனிபகவான் காசிக்குச் சென்று சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து வழிபட்டான். அதனால் கிரகப்பதவி கிடைத்தது. இந்த வரலாறு காசிக் காண்டத்தில் வருகிறது.

'நவக்கிரக ஆராதனை முறை' என்ற நூலில் சனி பகவானுடைய இயல்புகளைப் பற்றிய வருணனை வருகிறது: வில்லைப் போன்ற ஆசனத்தில் வீற்றிருப்பவன், கழுகு வாகனம் உடையவன்; (காக்கை வாகனம் என்பது பிரசித்தம்); மேற்குத் திக்கு நோக்கி வீற்றிருப்பவன்; நீல மேனி உடையவன் சூலமும் வில்லும் வரதமும் அபயமும் ஏந்திய நான்கு திருக்கரங்களைப் பெற்றவன்; மெல்ல நடப்பவன்: (அதனால்தான் மந்தன் என்று பெயர்). கறு மலரும், கறு சந்தனமும் அணிபவன்; கறுநிறக் குடையும் உடையவன்; சௌராஷ்டிர தேசத்தில் தோன்றியவன்; மகர ராசிக்கும் கும்ப ராசிக்கும் அதிபதி; துலா ராசியில் உச்சன்; மேஷத்தில் நீசன், நவக்கிரக மண்டலத்தில் கதிரவனுக்கு மேற்கே தனுசின் உருவம் கொண்ட மண்டலத்தில் உறைபவன்; சனிக்கு அதிதேவதை யமன்: நவக்கிரக பூஜையில் வலப்பக்கத்தில் சனியையும், இடப் பக்கத்தில் பிரத்யதி தேவதையாகிய பிரஜாபதியையும் ஆவாகனம் செய்ய வேண்டும்.

தமிழ்நாட்டில் கோயில்களில் எல்லாம் சனிபகவானுக்கு காக்கைதான் வாகனமாகக் காண்கிறது. "சனி பகவான் தோத்திரம்" என்ற நூலிலும் காக்கை வாகனம்தான் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால் சம்ஸ்கிருத மொழியிலுள்ள தியானச்சுலோகம் பலவற்றில் சனி பகவானுக்குக் கழுகு வாகனம் என்றே வருகிறது. 'சாபாஸனோ க்ருத்ர-ரத:' என்பதுபோல் 'க்ருத்ர' என்று வருகிறது. 'க்ருத்ர' என்றால் கழுகு என்று பொருள்

சனி பகவானுக்கு மந்தன், பிணிமுகன், முதுமுகன், முடவன், காரி என்று பல பெயர்கள் தமிழ்ச் சோதிட நூல்களில் வருகின்றன. சனியைப் 'புஷ்பப் பிரியன்' என்பார்கள். வன்னிமலர் சனிக்கு உகந்தமலர். தாமதகுணம் உடையவன். இவனுக்குப் பிரியமான உலோகம் இரும்பு, மணி

நீலம், தானியம் எள், கசப்புச் சுவை இவனுக்கு மிகப் பிடித்தது. சனிக்கிழமையில் இவன் சந்நிதியில் எள்ளுப் பொட்டலம் கட்டி நல்லெண்ணெய் விட்டு விளக்கேற்றினால் சனியால் உண்டாகும் துன்பங்கள் குறையும் என்று நவக்கிரக ஸ்தோத்ர ஸங்கிரகம் என்ற நூல் கூறுகிறது.

முத்துசாமி தீட்சிதர் இயற்றிய நவக்கிரக - கீர்த்தனையில் சனியைப் பற்றிய கீர்த்தனத்திலும் நல்லெண்ணெய் விளக்கு ஏற்றினால் சனிப்பிரீதி என்ற செய்தி வருகிறது. மாலினி மந்திரத்தால் துதித்து, பணிந்தவர்களுக்கு விரும்பிய பயன்களை அளிப்பதில் காமதேனுவைப் போன்றவன் சனி என்றும் தீட்சிதர் கூறுகிறார். சனியை ஆயுள்காரகன் என்று சோதிட நூல்கள் கூறுகின்றன. ''சனியைப் போல் கொடுப்பவனும் இல்லை, கெடுப்பவனும் இல்லை'' என்பது பழமொழி.

ஏழரைச் சனி அளித்த துன்பத்தால் நாட்டையும் பெண்டு பிள்ளைகளையும் இழந்த நளமகராஜாவின் கதை எல்லோருக்கும் தெரியும். ஓர் அரசனையே அவ்வளவு துன்புறுத்திய சனி சாதாரண மக்களை எப்படியெல்லாம் ஆட்டி வைக்க மாட்டார்!

அஷ்டமத்தில் சனியோ, ஏழரைச் சனியோ அதிகத் துன்பத்தைத் தந்தால் அதற்கும் ஒரு பரிகாரம் இருக்கிறது. சனீசுவரத் தலமான திருநள்ளாறு சென்று சனிபகவானை வழிபட்டால், நிச்சயமாக நன்மைகள் உண்டாகும். நளமகராஜனுக்கும் இந்தத் தலத்துக்குச் சென்ற பிறகுதான் நன்மை விளைந்தது.

பேரளம்-காரைக்கால் ரெயில் மார்க்கத்தில் இந்தத் தலம் இருக்கிறது. திருநள்ளாறு ரெயில் நிலையத்திலிருந்து கோயில் தெற்கே இரண்டு பர்லாங்குத் தூரத்தில் உள்ளது. மாயூரம் கும்பகோணம் தஞ்சாவூர் பாண்டிச்சேரியிலிருந்தும் பஸ்ஸில் இந்தத் தலத்துக்குப் போகலாம். பக்தர்கள் போய்த் தங்கிப்பூசிக்க வசதியாகச் சுற்றுலா-தங்குமிடங்கள் உள்ளன. நளனுக்கு நல்ல வழியைக் கொடுத்ததால் 'நள-ஆறு' என்ற பெயர் நாளடைவில் மருவி 'நள்ளாறு' என்று ஆகி விட்டது. 'திரு' என்று அடைமொழியும் இணைந்தது

இந்தத் தலத்தில் பதின்மூன்று தீர்த்தங்கள் உள்ளன. நள தீர்த்தம் பிரம்ம தீர்த்தம் ஸரஸ்வதி தீர்த்தம், அகத்தியர் தீர்த்தம் அம்ஸ தீர்த்தம் ஆகியவற்றுள் நளதீர்த்தம்

புகழ்பெற்றது. இதில் ஸ்நானம் செய்துதான் சனீசுவரனை வழிபட வேண்டும். அம்மனின் சந்நிதிக்கு எதிரில் மதிலை ஒட்டி ஸரஸ்வதி இருக்கிறது. இதில் ஸ்நானம் செய்தால் எல்லா கலை ஞானங்களும் உண்டாகுமாம்.

இந்த தலத்தைத் மூன்று நாயன்மார்களும் பாடியிருக்கிறார்கள். மிகவும் மகிமை வாய்ந்த புராணத்தலம் இது. திருமணம் ஆகாதவருக்குத் திருமணம் ஆகவும் புத்திரப் பேறு ஏற்படவும் நல்ல உத்தியோகம் கிடைக்கவும் இந்தத் தல மூர்த்தியை வழிபட்டால் நிச்சயம் பலன் கிடைக்கும் என்று தலபுராணம் கூறுகிறது.

''கேனிலப் புனல்காத்துத் தீண்டினும் பாவம் போமால்'' என்று தலபுராணம் கூறுகிறது. இந்தத் தலத்தைத் தரிசித்தால் பாபங்கள் போய் விடுமாம். நள தீர்த்தத்தில் முழுகி விட்டு சிரஸிலிருந்து ஒரு துளி நீர் நம் மேல்பட்டாலும் துன்பங்கள் விலகி விடுமாம். ''உறவு நீரில் ஒரு திவலை உன் மேற்படில் இத்துயர் போமால்'' என்கிறது தல புராணம்.

கோயில் மூலமூர்த்தியின் திருநாமம் ஸ்ரீதர்ப்பாரண்யேசுவரர் என்பது. அம்மனின் திருநாமம் போகமார்த்த பூண் முலையாள் என்றும் ஸ்ரீ பிராணேசுவரீ என்றும் அழைக்கிறார்கள். அம்மனின் சந்நிதிக்குப்பின்னால் கிழக்குப்பக்கத்தில் சனிபகவானின் திருச்சந்நிதி இருக்கிறது. மற்ற எட்டுக் கிரஹங்களும் இல்லாமல், சனி பகவான் மட்டுமே அந்தச் சந்நிதியில் காட்சியளிக்கிறார்.

கலி நீங்கிய நள மகராஜன் நள தீர்த்தத்தை உருவாக்கி, இறைவனுக்குப் பல திருவிழாக்கள் வைகாசி மாதப் புனர் பூச நன்னாளில் நடத்தி மீண்டும் புகழ் பெற்றான்: என்ற வரலாற்றை திருஞான சம்பந்தரும் தம் பதிகத்தில் கூறுகிறார். கிரகபீடைகள் விலகவும் ஏவல் வைப்பு போன்ற துன்பங்கள் விலகவும் இந்தத் தலத்துச் சனிபகவானை அவசியம் வணங்க வேண்டும், பகவானுக்கு வாக்குறுதி அளித்தது போல் அவரும் நம் துயர்களைத் துடைப்பார் என்பதில் சந்தேகமில்லை.

சனிப் பெயர்ச்சிக் காலங்களில் அங்கே ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து தரிசிப்பார்கள். வைகாசி மாதத்தில்-உத்திரட்டாதி நட்சத்திரம் தொடங்கிப் பதினெட்டு நாட்களுக்குப் பிரம்மோற்சவம் நடக்கிறது.

கோதாவரி நாட்டு மன்னன் தூயகண்டவர்மன் அவந்தி நாட்டு அரசன் உருசிராஜன் அக்கினி வண்ணர் போன்ற பெருமக்கள் திருநள்ளாறு சென்று இறைவனையும் சனி பகவானையும் வணங்கிப் பேறு பெற்ற புண்ணிய சாலிகள். தனுர் மாசத்தில் கால் மண்டலம் இந்தத் தலத்து பிரம்ம தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து சனிபகவானையும் இறைவ வனயும் வணங்கி வந்தால் வலிப்பு நோய் குணமாகிவிடும் என்பர்: அதுவே உண்மை. இந்தத் தலத்திலுள்ள ஒவ் வொரு தீர்த்தமும் விசேஷமானது. எவ்வித நோயையும் குணமாக்க வல்லது என்கிறது தல புராணம்.

ஒவ்வொரு சனிக்கிழமையும் இங்கே விசேஷ அர்ச்சனை களும் அபிஷேகங்களும் நடைபெறுகின்றன. ஸ்ரீசனீசுவர பகவானுக்குச் சங்கபுஷ்பம் (பாலாடை மலர் அல்லது காக் காட்டான் மலர்) போன்ற நீலநிறமுள்ள மலர்கள் விசேஷம் ஆனால் திருநள்ளாறு தலத்தில் எல்லாவித மலர்களுடன் வன்னிபத்திரமும் பில்வ பத்திரமும் சேர்ந்து அர்ச்சனை செய்கின்றனர்.

சனீசுவரனைப்பற்றி எல்லா மதங்களிலும் கூறப்பட்டி ருக்கிறது. கிறித்தவர்களின் வேதநூலான பைபிலில் சைத் தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது; திருக்குரானிலும் இருப்பதாகத் தெரிகிறது. இதனால் இவரைப் போற்றித் துதிப்பதால் எல்லா மதத்தினரும் துன்பமும் குறைந்து நிம் மதியுடன் வாழலாம்.

சனி பகவானுக்கு உரிய மலர் சமித்துக்கள் மணிகள் முதலியன: மலர்-கருங்குவளை, சமித்து-வன்னி; தானியம் -எள்; வாகனம்-காகம்; நவரத்தினங்கள்-நீலம்; ஜாதி-அலி உலோகம்-இரும்பு; நிறம்-கறுப்பு; பிடித்தசுவை-துவர்ப்பும் காரமும்; இணைந்த கஷாயம் இப்படி ஒவ்வொரு கிரகத்துக் கும் தனித்தனிப் பொருள்களைப் பற்றிச் சோதிட சாஸ்தி ரங்களில் கூறப்பட்டுள்ளன. இந்தத் தலத்தைப் பற்றித் திருஞானசம்பந்தர் அப்பர் போன்ற நாயன்மார்கள் பாடி யருளியுள்ள தேவாரப் பாடல்களை ஓதி வந்தால் பலவிதத் துன்பங்களும் பிணிகளும் தொலையும் என்று இந்தத் தல புராணம் கூறுகிறது. வாக்கு வன்மை பெறவும் குலம் தழைக்கவும் இந்தத் தல தரிசனம் மிகவும் உகந்தது என்பது பெரியோர்களின் அநுபவ வாக்கு.

நவக்கிரக மண்டலத்திலுள்ளச் சனிக்கோளின் வான வியல் உண்மைகளைப் பார்ப்போம்:

குருக் கிரகத்துக்கு அடுத்த கிரகம் சனி; இதன் குறுக் களவு சுமார் 73,000 மைல். 'சனி வளையம்' என்று கூறப் படும் வளையத்தின் குறுக்களவு சுமார் 1,700,000 மைல். மிக லேசான பொருள்களால் ஆனதால் இந்த கிரகத்தின் அடர்த்தி மிகவும் குறைவு: 0715 அதாவது தண்ணீரை விடக் குறைவான ஒப்படர்த்தி உள்ளது. எனவே சனிக் கிர கத்தைப் பெரிய கடல் நீரில் போட்டால் மிதக்கும். சூரிய னிலிருந்து இதன் தொலைவு 89.6 கோடி மைல். பூமிக்கும் சனிக்கும் இடையிலுள்ள தொலைவு 75 கோடி மைல். இது தன்னைத்தானே ஒருமுறை சுற்றிக் கொள்ள, 10மணி 14 நிமிஷங்கள் ஆகின்றன. அதனால் கிட்டத்தட்ட பத்தரை மணிநேரமே சனிக்கிரஹத்தின் ஒரு நாள். இது ஒருமுறை சூரியனைச் சுற்றிவர இருபத்தொன்பதரை ஆண்டுகள் ஆகின்றன. அதாவது பூமியில் இருபத்தொன்பதரை ஆண் டுகள் கழிந்தால் சனியில் ஓர் ஆண்டு கழிந்திருக்கும். சாதா ரணமாகப் பார்த்தால் மஞ்சள் நிற நட்சத்திரமாக இது தெரியும். தொலைநோக்கியின் மூலம் பார்த்தால், இதைச் சுற்றியுள்ள வளையம் தெரியும். வேறு எந்தக் கிரகத்துக்கு மே இத்தகைய வளையம் கிடையாது. 1610இல் விஞ் ஞானி கலீலியோ இதை முதல் முதலில் கண்டு பிடித்தார். சனியை இந்த வளையம் மிக வேகமாகச் சுற்றுகிறது. உள் ளுக்குள் உள்ளாய் மூன்று வளையங்கள் உள்ளன என்று தற் கால ஆராய்ச்சியில் கண்டிருக்கிறார்கள்.

சனிக்கு ஒன்பது உபக் கிரகங்கள் உள்ளன. அவற்றுள் டைட்டன் என்பது மிகப் பெரியது. இது சனியிலிருந்து 7,60,000 மைல் தூரத்தில் உள்ளது. நம் சந்திரனை விட இரட்டிப்புக் கனமுடையது. எப்போதும் கடுமையான குளிர்; பிராணவாயு இருப்பதற்கான அறிகுறிகளே இல்லை. சனி தன்னைத்தானே சுற்றிக் கொள்ளும் போது பம்பரம் போல் பக்கவாட்டில் சுற்றுவதாகக் கூறுகிறார்கள்.

''க்ருஹ்ணாதீதி க்ரஹா:'' பிடிக்கிறபடியினால் கிரகங் கள் என்று பெயர். அதாவதுபலன் கொடுப்பதற்காகஎன்று பொருள். சுபனாக இருந்தால் சுபபலனையும் கெட்ட ஸ்தா னத்திலிருந்தால் அசுபபலனையும் கொடுக்கிறார்கள்.

நவக்கிரகம் சரியாக அமையாத ஜாதகம் உடையவருக்கு சனி தசையிலும் அஷ்டமத்தில் வரும்போதும் ஏழரைச் சனியின் போதும் துன்பங்களைக் கொடுப்பான் என்பது உண்மை. அந்தத் துன்பங்களைக் குறைத்துச் சனி பகவானின் ப்ரீதியை அடைய எளியமுறை ஒன்று இருக்கிறது: ஜோதிடகலாநிதி-தர்மரக்ஷித்ரீ டாக்டர் கே. என். சரஸ்வதி அவர்கள் இந்த எளியமுறையை வகுத்து உதவியிருக்கிறார்கள். திருநள்ளாறு செல்லாமலும் அந்தப் பலனை அடையலாம். சனி பகவானின் கவசம், மந்திரம், அஷ்டோத்தர சதநாமம் ஆகியவற்றைத் தொகுத்து தனிப் புத்தகமாகத் தந்திருக்கிறார்கள். அன்றாடம் பத்துநிமிஷம் சிறப்பாகச் சனிக்கிழமைகளில், இந்தத் தோத்திரங்களைக் கூறி வந்தால் சனிபகவானின் நல்லருள் கிடைக்கும்.

சனி பகவானின் காயத்திரி

காகத்வஜாய வித்மஹே கட்கஹஸ்தாய தீமஹி |
தந்நோ மந்த: ப்ரசோதயாத் ||

சனி மந்திரம்

ஓம் அஸ்யஸ்ரீ ஶனைஶ்சர க்ரஹ மஹா மந்த்ரஸ்ய | உருமித்ர ரிஷி:, காயத்ரீ ச்சந்த:, ஶனைஶ்சரோ தேவதா, ஶம்பீஜம், நம் சக்தி:, மம் கீலகம் | ஶனைஶ்சர ப்ரஸாத ஸித்த்யர்த்தே ஜபே விநியோக: |

கரந்யாஸம்

ஶனைஶ்சராய அங்குஷ்ட்டாப்யாம் நம: |
மந்தகதயே தர்ஜனீப்யாம் நம: |
அதோக்ஷஜாய மத்யமாப்யாம் நம: |
ஸௌரயே அனாமிகாப்யாம் நம: |
அபயங்கராய நேத்ரத்ரயாய வௌஷட் |
ஊர்த்வரோம்ணே: அஸ்த்ராய பட் |
பூர்ப்புவஸ்ஸுவரோம் இதி திக்பந்த: |

த்யானம்

நீலாப்பரே நீலவபு: கிரீடீ க்ருத்ரஸ்த்திதஸ் த்ராஸ்கரோ தனுஷ்மான் | சதுர்ப்புஜஸ் ஸூரியஸுத: ப்ரஶாந்த: ஸதாஸ்து மஹ்யம் வரத ப்ரஸன்ன ||
லமித்யாதினா மானஸ பூஜா கார்யா ||

மூலமந்த்ரம்

ஶன்னோ தேவீர பிஷ்டய
ஆபோ பவந்து பீதயே |
ஶம்யோர பிஸ்ரவந்து ந: ||

சனி பகவான் கவசம்

ஓம் அஸ்ய ஶ்ரீ ஶனைஶ்சர கவச மஹாமந்த்ரஸ்ய | காஶ்யப ரிஷி: | அனுஷ்டுப் ச்சந்த: | ஶனைஶ்சரோ தேவதா | ஶம் பீஜம், நம் ஶக்தி:, மம் கீலகம், மம ஶனைஶ்சர க்ரஹப்ரஸாத ஸித்த்யர்த்தே ஜபே வினியோக: |

கரன்யாஸம்

ஶாம்அங்குஷ்ட்டாப்யாம் நம: |
ஶீம்தர்ஜநீப்யாம் நம: |
ஶூம் மத்யமாப்யாம் நம: |
ஶைம் அனாமிகாப்யாம் நம: |
ஶௌம் கனிஷ்ட்டிகாப்யாம் நம: |
ஶ: கரதல கரப்ருஷ்ட்டாப்யாம் நம: |

அங்கன்யாஸம்

ஶாம் ஹ்ருதயாய நம: |
ஶீம் சிரஸே ஸ்வாஹா |
ஶூம் சிகாயை வஷட் |
ஶைம்கவசாய ஹூம் |
ஶௌம் நேத்ரத்ரயாய வௌஷட் |
ஶ : அஸ்த்ராய பட் |
பூர்ப்-புவஸ்-ஸுவரோமிதி திக்பந்த: |

த்யானம்

சதுர்ப்புஜம் ஶனிம் தேவம் சாபதூணீக்ருபாணகை: |
ஸஹிதம் வரதம் பீமதம்ஷ்ட்ரம் நீலோத்பலாக்ருதிம் ||
நீலமால்யானுலேபம் ச நீலரத்னைரலங்க்ருதம் |
ஜ்வாலார்த்வ மகுடாபாஸம் நீலக்ருத்ர ரதான்விதம் ||
மேரும் ப்ரதக்ஷிணம் யாந்தம் ஸர்வலோகபயாவஹம் |
க்ருஷ்ணாம்பரதரம் தேவம் த்விபுஜம் க்ருத்ரஸம்ஸ்திதம் ||
ஸர்வபீடாபஹரம் ந்ருணாம்
த்யாயேத் க்ரஹகணோத்தமம் ||

லமித்யாதினா மானஸபூஜா கார்யா |

அத கவசம்

ஶனைஶ்சரஸ் ஶிரோ ரக்ஷேத், முகம் பக்தார்தி நாஶன:
கர்ணௌ க்ருஷ்ணாம்பர: பாது, நேத்ரம் ஸர்வபயங்கர: ||
க்ருஷ்ணாங்கோ நாஸிகாம் ரக்ஷேத்,
கண்ட்டம் மே சிதிகண்ட்டக: |
புஜௌ மே ஸுபுஜ: பாது, ஹஸ்தௌ நீலோத்பலப்ரப: |
பாது மே ஹ்ருதயம் கிருஷ்ண:, குக்ஷிம் சுஷ்கோதரஸ் ததா
கடிம் மே விகட: பாது ஊரு மே கோரரூபவான் ||
ஜானுனீ பாதுமே தீர்க்கோ, ஜங்க்மே மங்கள ப்ரத: |
ஸர்வாணி ச மமாங்கானி பாது பாஸ்கர நந்தன: ||

பலச்ருதி

ய இதம் கவசம் திவ்யம் ஸர்வபீடாஹரம் ந்ருணாம் |
படதி ஶ்ரத்தயா யுக்த: ஸர்வான் காமான் அவாப்நுயாத் ||

ஶ்ரீ சனைஶ்சர ஸ்தோத்ரம்

ஓம் அஸ்யஶ்ரீ ஶனைஶ்சர ஸ்தோத்ர மஹாமந்த்ரஸ்ய—கஶ்யப ரிஷி: | அனுஷ்ட்டுப் ச்சந்த: | மந்தகதிஸ் ஸௌரிர் தேவதா | ஶம் பீஜம் | நம் சக்தி: | மம் கீலகம் | மம ஶனைஶ்ர ப்ரஸாத ஸித்த்யர்த்தே ஜபே வினியோக: |

கரந்யாஸம்

ஶனைஶ்சராய அங்குஷ்ட்டாப்யாம் நம:| மந்தகதயே தர்ஜனீப்யாம் நம: | அதோக்ஷஜாய மத்யமாப்யாம் நம: | ஸூர்யபுத்ராய அனாமிகாப்யாம் நம: | ஶுஷ்கோதராய கனிஷ்ட்டிகாப்யாம் நம: | சாயாஸுதாய கரதலகரப்ருஷ்ட்டாப்யாம் நம: |

அங்கன்யாஸம்

ஶனைஶ்சராய ஹ்ருதயாய நம: | மந்தகதயே சிரஸே ஸ்வாஹா | அதோக்ஷஜாய சிகாயை வஷட் | ஸூர்யபுத்ராய கவசாய ஹும் | ஶுஷ்கோதராய நேத்ரத்ரயாய

வௌஷட் | சாயா ஸுதாய அஸ்த்ராய பட் | பூர்ப்புவஸ்ஸுவரோமிதி திக்பந்த: |

த்யானம்

சாபாஸனோ க்ருத்ரரதோ அதிநீல
ப்ரத்யங்முக: காஶ்யப கோத்ரஜாத: |
ஸஶூலசாபேஷு கதாதரோ அவ்யாத்
ஸௌராஷ்ட்ர தேசப்ரபவஶ்ச ஸௌரி: ||

நீலாம்பரோ நீலவபு: கிரீட
க்ருத்ரஸ்த்தித ஸத்ராஸகரோ தனுஷ்மான் |
சதுர்ப்புஜ: ஸூர்யஸுத: பிரஶாந்த:
ஸதாஸ்து மஹ்யம் வரத: ப்ரஸன்ன: ||

ஶனைஶ்சராய ஶாந்தாய ஸர்வாபீஷ்ட ப்ரதாயினே |
நமஸ் ஸர்வாத்மனே துப்யம் நமோ நீலாம்பராய ச ||

த்வாதஶாஷ்டம ஜன்மர்க்ஷே த்விதீயஸ்த்தான ஏவ ச
த்வத் ஸஞ்சா ரோத்பவா தோஷா: ஸர்வே
நஶ்யந்து மே ப்ரபோ ||

நமோ அர்க-புத்ராய ஶனைஶ்சராய
தமால தலாம்புஜ மேசகாய |
ஶ்ருத்வா ஸ்துதிம் மே பவ காமதஸ் த்வம்
பலபரதோ மே பவ ஸூர்யபுத்ர |

(இங்கு லக்ஷ்மியாதி பூஜை செய்யவும்)

த்யாத்வா ஸரஸ்வதீம் தேவீம் கணாத்யக்ஷம் ஸுபூஜிதம்
ராஜா தஶரத-ஸ்தோத்ரம் ஸௌரேரித மதாகரோத் ||

நம: க்ருஷ்ணாய நீலாய ஶிதிகண்ட்ட நிபாய ச |
நமோ நீல மயூகாய நீலோத்பல நிபாய ச |

நமோ நிர்மாம்ஸ தேஹாய தீர்க்கஸ்ருதி ஜடாய ச |
நமோ விஶால நேத்ராய ஶுஷ்கோதர பயானக: ||

நம: பௌருஷகாத்ராய ஸ்தூலரோம்ணேஶ தே நம:
நமோ நித்யம் க்ஷுதார்த்தாய ஹ்ருத்ருப்தாயசதே நம:
நமோ கோராய ரௌத்ராய பீஷணாய கராளினே |
நமோ தீர்க்காய சுஷ்காய காளதம்ஷ்ட்ர நமோஸ்துதே
நமோஸ்துதே கோரரூபாய துர்நிரீக்ஷ்யாய தே நம:
நமோஸ்துதே ஸர்வபக்ஷாய வலீமுக நமோ அஸ்துதே ||
ஸூர்யபுத்ர நமஸ்தே அஸ்து பாஸ்கரே அபயதாயினே ||
அதோ த்ருஷ்டே நமஸ்தே அஸ்து
ஸம்வர்தக நமோஸ்துதே ||
நமோ மந்தகதே துப்யம் நிஷ்ப்ரபாய நமோ நம:
தபனாஜ்ஜாததேஹாய நித்யயோகதராய ச ||
ஞானசக்ஷுர் நமஸ்தேஸ்து காச்யபாத்மஜேஸூனவே ||
துஷ்டோ ததாஸி ராஜ்யம் த்வம் குபிதோ ஹரஸி
தத்க்ஷணாத் |
தேவாஸுரமனுஷ்யாஶ்ச ஸித்தவித்யாதரோரகா ||
த்வயாஅவலோகிதாஸ் ஸர்வே தைன்யமாஶு வ்ரஜந்தி தே
ப்ரம்ஹா சுக்ரோ யமஶ்சைவ முனயஸ் ஸப்ததாரகா:
ராஜ்யப்ரஷ்டா: பதந்தீஹ தவ த்ருஷ்ட்யா அவலோகிதா:
த்வயா அவலோகிதாஸ்தே அபி நாஶம் யாந்தி ஸமூலத: |
ப்ரஸாதம் குரு மே ஸௌரே ப்ரணத்யாஹி த்வமர்த்தின:
ஏவம் ஸ்துதஸ்ததா ஸௌரி: க்ரஹராஜோ மஹாபல:
அப்ரவீத்ச ஶநிர்வாக்யம் ஹ்ருஷ்டரோமா ஸ பாஸ்கரி:
ப்ரீதோ அஸ்மிதவராஜேந்த்ர
ஸ்தோத்ரேணானேன ஸ்மரந்தி
அதேயம் வா வரம் துப்யம் ப்ரீதோ அஹம் ப்ரததாமி ச
த்வயா க்ருதம் து யத்ஸ்தோத்ரம் ய: படேதிஹ மாநவ:
ஏகவாரம் த்விவாரம் வா பீடாம் முஞ்சாமி தஸ்ய வை
ம்ருத்யுஸ்தானே ஸ்தித வாபி ஜன்ம ஸ்தான கதேபி வா |
ய:புமான் ச்ரத்தயா யுக்த: ஶுசிஸ்நாத்வா ஸமாஹித: ||
ஶமீபத்ரைஸ் ஸமப்யர்ச்ய ப்ரதிமாம் லோஹஜாம் மம
மாஷோதனம் திலைர்மிச்ரம் தத்யால்லோஹம் து தக்ஷிணம்||
க்ருஷ்ணாம் காம் மஹிஷீம் வஸ்த்ரம்
மாமுத்திஶ்ய த்விஜாயதே |
மத்தி நே து விசேஷேண ஸ்தோத்ரேண அனேன பூஜயேத் ||

பூஜயித்வா ஜபேத் ஸ்தோத்ரம் பூத்வா க்ருதாஞ்ஜலி: |
தஸ்ய பீடாம் நசைவாஹம் கரிஷ்யாமி கதாசன ||
கோசரே ஜன்மலக்னே ச தஶாஸு அந்தர்தஶாஸுச ||
ரக்ஷாமி ஸததம் தம் ஹி பீடாப்யோ அன்யக்ரஹஸ்ய ச
அனேனைவ ப்ரகாரேண பீடாமுக்தம் ஜகத் பவேத் ||
ஸூத உவாச—
வரத்வயம் து ஸம்ப்ராப்ய ராஜா தஶரதஸ்ததா |
மேனே க்ருதார்த்தம் ஆத்மானம்
ஸம்யக் ஸ்துத்வா ஶனைஶ்சரம் ||
கோணஸ் ஶனைஶ்சரோ மந்த: சாயாஹ்ருதயநந்தன: |
மார்தாண்டஜஸ்ததா ஸௌரி: பதாங்கிர்க்ருத்ரவாஹன:
ப்ரம்மண்ய: க்ருரகர்மா ச நீலவஸ்த்ரோ அஞ்ஜன த்யுதி:
க்ருஷ்ணோ தர்மானுஜஸ்ஶாந்த: ஸுஷ்கோதாதரப்ரத: ||
ஷோடஶைதானி நாமானி ய:படேச்ச தினேதினே |
விஷமஸ்தோபி பகவான் ஸுப்ரீதஸ்தஸ்ய ஜாயதே ||
மந்தவாரே ஶுசிஸ்நாத்வா மிதாஹாரோ ஜிதேந்த்ரிய:
தத்வர்ண குஸுமைஸ்ஸம்யக் ஸர்வாங்கம் த்விஜஸத்தம: ||
பூஜயித்வா அன்ன-பானாத்யை: ஸ்தோத்ரம் ய ப்ரயத:
படேத் |
புத்ரகாமோ லபேத் புத்ரம் தனகோடி லபேத்தனம்
ராஜ்ய காமோ லபேத் ராஜ்யம் ஜயார்த்தீ விஜயீபவேத்
ஆயுஷ்காமோ லபேதாயு: ஸ்ரீகாம:ஶ்ரியமாப்நுயாத் ||
யத்யதிச்சதி தத்ஸர்வம் பகவான் பக்தவத்ஸல: |
சிந்திதானிச கர்மாணி ததாதி ச ந ஸம்ஶய: ||
ஶனி நாதாப்யனுக்ஞாத: ஸ்வஸ்த்தானம் அகமந் ந்ருப: |
ஸ்வஸ்த்தான ஸங்கதோ பூத்வா
ப்ராப்தகாமோ அபவத்ததா ||

ஸ்ரீசனைஶ்சர அஷ்டோத்தர சதநாம ஸ்தோத்ரம்

ஶனைஶ்சராய ஶாந்தாய ஸர்வாபீஷ்டப்ரதாயினே |
ஶரண்யாய வரேண்யாய ஸர்வேஶாய நமோநம: ||
ஸௌம்யாய ஸுரவந்த்யாய ஸுரலோகவிஹாரிணே
ஸுகாச நோபவிஷ்டாய ஸுந்தராய நமோநம: ||

கனாய கனரூபாய கனாபரண தாரிணே .
கனஸார விலேபாய கத்யோதாய நமோ நம: ||
மந்தாய மந்த சேஷ்டாய மஹனீய குணாத்மனே |
மர்த்ய பாவனபாதாய மஹேஶாய நமோ நம: ||
சாயாபுத்ரயாய ஶர்வாய ஶததூணீர தாரிணே |
சர-ஸ்த்திர ஸ்வபாவாய சஞ்சலாய நமோ நம: ||
நீலவர்ணாய நித்யாய நீலாஞ்ஜன நிபாயச |
நீலாம்பரவிபூஷாய நிஶ்சலாய நமோ நம: ||
வேத்யாய விதிரூபாய விரோதாதார பூமயே |
பேதாஸ்பத ஸ்வபாவாய வஜ்ரதேஹாய தே நம: |
வைராக்யதாய வீராய வீதரோகபயாய ச
விபத் பரம்பரேஶாய விஶ்வவந்த்யாய தே நம: ||
க்ருத்ரவாஹனாய கூடாய கூர்மாங்காய குரூபிணே
குத்ஸிதாய குணாட்யாய கோசராய நமோ நம: ||
அவித்யாமூல நாஶனாய வித்யாவித்யா ஸ்வரூபிணே |
ஆயுஷ்காரணாய ஆபதுர்த்தர்த்ரேச நமோ நம: ||
விஷ்ணுபக்தாய வஶினே விவிதாகமவேதினே |
விதிஸ்துத்யாய வந்த்யாய விரூபாக்ஷாய தே நம:
வரிஷ்ட்டாய கரிஷ்ட்டாய வஜ்ராங்குஶ தராய ச
வரதாபய ஹஸ்தாய வாமனாய நமோ நம: ||
ஜ்யேஷ்ட்டா-பத்னீ ஸமேதாய ச்ரேஷ்ட்டாயமிதபாஷிணே
கஷ்டௌக-நாஶகாரகாய புஷ்டிதாய நமோ நம: ||
ஸ்துத்யாய ஸ்தோத்ர-கம்யாய பக்திவஶ்யாய பானவே
பானுபுத்ராய பவ்யாய பாவனாய நமோ நம: ||
தனுர்மண்டல ஸம்ஸ்த்தாய தனதாய தனுஷ்மதே |
தனுப்ரகாஶ தேஹாய தாமஸாய நமோ நம: |
அஶேஷஜன வந்த்யாய விஶேஷபலதாயினே |
வஶீக்ருதஜனேஶாய பஶூனாம் பதயே நமோ நம: ||
கேசராய ககேஶாய கனநீலாம்பராய ச |
காடின்யமனஸா ஆர்யகணஸ்துத்யாய தே நம: ||
நீலச்சத்ராய நித்யாய நிர்குணாய குணாத்மனே |
நிராமயாய நித்யாய வந்தநீயாய தே நம:

தீராய திவ்யதேஹாய தீனார்திஹரணாய ச |
தைன்ய நாஶகராய ஆர்யஜனகண்யாய தே நம: ||
க்ரூராய க்ரூரசேஷ்டாய காமக்ரோதகராய ச |
களத்ரபுத்ர ஶத்ருத்வ காரணாய நமோ நம: ||
பரிபோஷித பக்தாய பரபீதிஹராய ச
பக்தஸங்க மனோபீஷ்ட பலதாய நமோ நம: ||
இத்தம் ஶனைஶ்சரஸ்யேதம்
நாம்னாம் அஷ்டோத்தரம் ஶதம் |
ப்ரத்யஹம் ப்ரஜபன் மர்த்ய: தீர்க்கமாயு ரவாப்னு யாத் ||

ஸ்ரீ சனைஶ்சர அஷ்டோத்தர சதநாமாவளி

(நாமாவளியைச் சொல்லி அர்ச்சிக்கும் போது ஒவ்வொரு நாமாவுக்கும் முதலில் 'ஓம்' என்றும் கடைசியில் 'நம:' என்றும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.)

ஓம் ஶனைஶ்சராய நம :
ஶாந்தாய
ஸர்வாபீஷ்டப்ரதாயினே
ஶரண்யாய
வரேண்யாய
ஸர்வேஶாய
ஸௌம்யாய
ஸுரவந்த்யாய நம:
ஸுரலோகவிஹாரிணே
ஸுகாஸந
உபவிஷ்டாய (10)
ஸுந்தராய
கனாய
கனரூபாய
கனாபரணதாரிணே
கத்யோதாய
மந்தாய
மந்தசேஷ்டாய
மஹனீய குணாத்மனே
ஓம் மர்த்யபாவன
பாதாய (20)
மஹேஶாய
சாயாபுத்ராய
ஸர்வாய
சததூணீர தாரிணே
சர-ஸ்த்திர-ஸ்வபாவாய
சஞ்சலாய
நீலவர்ணாய
நித்யாய
நீலாஞ்ஜனநிபாய
நீலாம்பரவிபூஷாய (30)
நிஶ்சலாய
வேத்யாய
விதிரூபாய
விரோதாதாரபூமயே
பேதாஸ்பத
ஸ்வபாவாய
வஜ்ரதேஹாய
வைராக்யதாய
வீராய

நம: பௌருஷகாத்ராய ஸ்தூலரோம்ணேஶ தே நம:
நமோ நித்யம் க்ஷுதார்த்தாய ஹ்ருத்ருப்தாயசதே நம:
நமோ கோராய ரௌத்ராய பீஷணாய கராளினே |
நமோ தீர்க்காய சுஷ்காய காளதம்ஷ்ட்ர நமோஸ்துதே
நமோஸ்துதே கோரரூபாய துர்நிரீக்ஷ்யாய தே நம:
நமோஸ்துதே ஸர்வபக்ஷாய வலீமுக நமோ அஸ்துதே ||
ஸூர்யபுத்ர நமஸ்தே அஸ்து பாஸ்கரே அபயதாயினே ||
அதோ த்ருஷ்டே நமஸ்தே அஸ்து
ஸம்வர்தக நமோஸ்துதே ||
நமோ மந்தகதே துப்யம் நிஷ்ப்ரபாய நமோ நம:
தபனாஜ்ஜாததேஹாய நித்யயோகதராய ச ||
ஞானசக்ஷுர் நமஸ்தேஸ்து காச்யபாத்மஜேஸூனவே ||
துஷ்டோ ததாஸி ராஜ்யம் த்வம் குபிதோ ஹரஸி
தத்க்ஷணாத் |
தேவாஸுரமனுஷ்யாஶ்ச ஸித்தவித்யாதரோரகா ||
த்வயாஅவலோகிதாஸ் ஸர்வே தைன்யமாஶு வ்ரஜந்தி தே
ப்ரம்ஹா சுக்ரோ யமஶ்சைவ முனயஸ் ஸப்ததாரகா:
ராஜ்யப்ரஷ்டா: பதந்திஹ தவ த்ருஷ்ட்யா அவலோகிதா:
த்வயா அவலோகிதாஸ்தே அபி நாஶம் யாந்தி ஸமூலத: |
ப்ரஸாதம் குரு மே ஸௌரே ப்ரணத்யாஹி த்வமர்த்தின:
ஏவம் ஸ்துதஸ்ததா ஸௌரி: க்ரஹராஜோ மஹாபல:
அப்ரவீத்ச ஶநிர்வாக்யம் ஹ்ருஷ்டரோமா ஸ பா[illegible]:
ப்ரீதோ அஸ்மிதவராஜேந்த்ர
ஸ்தோத்[illegible]ணானேன ஸ்மரந்தி
அதேயம் வா வரம் துப்யம் ப்ரீதோ அஹம் ப்ரததாமி ச
த்வயா க்ருதம் து யத்ஸ்தோத்ரம் ய: படேதிஹ மாநவ:
ஏகவாரம் த்விவாரம் [illegible] பீடாம் முஞ்சாமி தஸ்ய வை
ம்ருத்யுஸ்தா[illegible]த வாபி ஜன்ம ஸ்தான கதேபி வா |
ய:பும[illegible] ச்ரத்தயா யுக்த: ஶுசிஸ்நாத்வா ஸமாஹித: ||
[illegible]பத்ரைஸ் ஸமப்யர்ச்ய ப்ரதிமாம் லோஹஜாம் மம
மாஷோதனம் திலைர்மிச்ரம் தத்யால்லோஹம் து தக்ஷிணாம்||
க்ருஷ்ணாம் காம் மஹிஷீம் வஸ்த்ரம்
மாமுத்திஶ்ய த்விஜாயதே |
மத்தி நே து விசேஷேண ஸ்தோத்ரேண அனேன பூஜயேத் ||

பூஜயித்வா ஜபேத் ஸ்தோத்ரம் பூத்வா க்ருதாஞ்ஜலி: |
தஸ்ய பீடாம் நசைவாஹம் கரிஷ்யாமி கதாசன ||
கோசரே ஜன்மலக்னே ச தஶாஸு அந்தர் தஶாஸுச ||
ரக்ஷாமி ஸததம் தம் ஹி பீடாப்யோ அன்யக்ரஹஸ்ய ச
அனேனைவ ப்ரகாரேண பீடாமுக்தம் ஜகத் பவேத் ||
ஸூத உவாச—
வரத்வயம் து ஸம்ப்ராப்ய ராஜா தஶரதஸ்ததா |
மேனே க்ருதார்த்தம் ஆத்மானம்
ஸம்யக் ஸ்துத்வா ஶனைஶ்சரம் ||
கோணஸ் ஶனைஶ்சரோ மந்த: சாயாஹ்ருதயநந்தன: |
மார்தாண்டாஜஸ்ததா ஸௌரி: பதாங்கிர்க்ருத்ரவாஹன:
ப்ரம்மண்ய: க்ருரகர்மா ச நீலவஸ்த்ரோ அஞ்ஜன த்யுதி:
க்ருஷ்ணோ தர்மானுஜஸ்ஶாந்த: ஸுஷ்கோதாதரப்ரத: ||
ஷோடஶைதானி நாமானி ய:படேச்ச தினேதினே |
விஷமஸ்தோபி பகவான் ஸுப்ரீதஸ்தஸ்ய ஜாயதே ||
மந்தவாரே ஶுசிஸ்நாத்வா மிதாஹாரோ ஜிதேந்த்ரிய:
தத்வர்ண குஸுமைஸ்ஸம்யக் ஸர்வாங்கம் த்விஜஸத்தம: ||
பூஜயித்வா அன்ன-பானாத்யை: ஸ்தோத்ரம் ய ப்ரயத:
படேத் |
புத்ரகாமோ லபேத் புத்ரம் தனகோடி லபேத்தனம்
ராஜ்ய காமோ லபேத் ராஜ்யம் ஜயார்த்தீ விஜயீபவேத்
ஆயுஷ்காமோ லபேதாயு: ஸ்ரீகாம:ஶ்ரியமாப்நுயாத் ||
யத்யதிச்சதி தத்ஸர்வம் பகவான் பக்தவத்ஸல: |
சிந்திதானிச கர்மாணி ததாதி ச ந ஸம்ஶய: ||
ஶனி நாதாப்யனுக்ஞாத: ஸ்வஸ்த்தானம் அகமந் ந்ருப: |
ஸ்வஸ்த்தான ஸங்கதோ பூத்வா
ப்ராப்தகாமோ அபவத்ததா ||

ஸ்ரீசனைஶ்சர அஷ்டோத்தர சதநாம ஸ்தோத்ரம்

ஶனைஶ்சராய ஶாந்தாய ஸர்வாபீஷ்டப்ரதாயினே |
ஶரண்யாய வரேண்யாய ஸர்வேஶாய நமோநம: ||
ஸௌம்யாய ஸுரவந்த்யாய ஸுரலோகவிஹாரிணே
ஸுகாச நோபவிஷ்டாய ஸுந்தராய நமோநம: ||

கனாய கனருபாய கனாபரண தாரிணே .
கனஸார விலேபாய கத்யோதாய நமோ நம: ||
மந்தாய மந்த சேஷ்டாய மஹனீய குணாத்மனே |
மர்த்ய பாவனபாதாய மஹேஶாய நமோ நம: ||
சாயாபுத்ரயாய ஶர்வாய ஶததூணீர தாரிணே |
சர-ஸ்த்திர ஸ்வபாவாய சஞ்சலாய நமோ நம: ||
நீலவர்ணாய நித்யாய நீலாஞ்ஜன நிபாயச |
நீலாம்பரவிபூஷாய நிஶ்சலாய நமோ நம: ||
வேத்யரய விதிரூபாய விரோதாதார பூமயே |
பேதாஸ்பத ஸ்வபாவாய வஜ்ரதேஹாய தே நம: |
வைராக்யதாய வீராய வீதரோகபயாய ச
விபத் பரம்பரேஶாய விஶ்வவந்த்யாய தே நம: ||
க்ருத்ரவாஹனாய கூடாய கூர்மாங்காய குரூபிணே
குத்ஸிதாய குணாட்யாய கோசராய நமோ நம: ||
அவித்யாமூல நாஶனாய வித்யாவித்யா ஸ்வரூபிணே |
ஆயுஷ்காரணாய ஆபதுர்த்தர்த்ரேச நமோ நம: ||
விஷ்ணுபக்தாய வஶினே விவிதாகமவேதினே |
விதிஸ்துத்யாய வந்த்யாய விரூபாக்ஷாய தே நம:
வரிஷ்ட்டாய கரிஷ்ட்டாய வஜ்ராங்குஶ தராய ச
வரதாபய ஹஸ்தாய வாமனாய நமோ நம: ||
ஜ்யேஷ்ட்டா-பத்னீ ஸமேதாய ச்ரேஷ்ட்டாயமிதபாஷிணே
கஷ்டௌக-நாஶகாரகாய புஷ்டிதாய நமோ நம: ||
ஸ்துத்யாய ஸ்தோத்ர-கம்யாய பக்திவஶ்யாய பானவே
பானுபுத்ராய பவ்யாய பாவனாய நமோ நம: ||
தனுர்மண்டல ஸம்ஸ்த்தாய தனதாய தனுஷ்மதே |
தனுப்ரகாஶ தேஹாய தாமஸாய நமோ நம: |
அஶேஷ்ஜன வந்த்யாய விஶேஷபலதாயினே |
வஶீக்ருதஜனேஶாய பஶூனாம் பதயே நமோ நம: ||
கேசராய ககேஶாய கனநீலாம்பராய ச |
காடின்யமனஸா ஆர்யகணஸ்துத்யாய தே நம: ||
நீலச்சத்ராய நித்யாய நிர்குணாய குணாத்மனே |
நிராமயாய நித்யாய வந்தநீயாய தே நம:

தீராய திவ்யதேஹாய தீனார்திஹரணாய ச |
தைன்ய நாஶகராய ஆர்யஜனகண்யாய தே நம: ||
க்ரூராய க்ரூரசேஷ்டாய காமக்ரோதகராய ச |
களத்ரபுத்ர ஶத்ருத்வ காரணாய நமோ நம: ||
பரிபோஷித பக்தாய பரபீதிஹராய ச
பக்தஸங்க மனோபீஷ்ட பலதாய நமோ நம: ||
இத்தம் ஶனைஶ்சரஸ்யேதம்
நாம்னாம் அஷ்டோத்தரம் ஶதம் |
ப்ரத்யஹம் ப்ரஜபன் மர்த்ய: தீர்க்கமாயு ரவாப்னு யாத் ||

ஶ்ரீ சனைஶ்சர அஷ்டோத்தர சதநாமாவளி

(நாமாவளியைச் சொல்லி அர்ச்சிக்கும் போது ஒவ்வொரு நாமாவுக்கும் முதலில் 'ஓம்' என்றும் கடைசியில் 'நம:' என்றும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.)

ஓம் ஶனைஶ்சராய நம:
ஶாந்தாய
ஸர்வாபீஷ்டப்ரதாயினே
ஶரண்யாய
வரேண்யாய
ஸர்வேஶாய
ஸௌம்யாய
ஸுரவந்த்யாய நம:
ஸுரலோகவிஹாரிணே
ஸுகாஸந
உபவிஷ்டாய (10)
ஸுந்தராய
கனாய
கனரூபாய
கனாபரணதாரிணே
கத்யோதாய
மந்தாய
மந்தசேஷ்டாய
மஹனீய குணாத்மனே
ஓம் மர்த்யபாவன
பாதாய (20)
மஹேஶாய
சாயாபுத்ராய
ஸர்வாய
சததூணீரதாரிணே
சர-ஸ்த்திர-ஸ்வபாவாய
சஞ்சலாய
நீலவர்ணாய
நித்யாய
நீலாஞ்ஜனநிபாய
நீலாம்பரவிபூஷாய (30)
நிஶ்சலாய
வேத்யாய
விதிரூபாய
விரோதாதாரபூமயே
பேதாஸ்பத
ஸ்வபாவாய
வஜ்ரதேஹாய
வைராக்யதாய
வீராய

ஓம் வீதரோகபயாய நம:
விபத்பரம்பரேஶாய (40)
விஶ்வவந்த்யாய
க்ருத்ரவாஹனாய
கூடாய
கூர்மாங்காய
குரூபிணே
குத்ஸிதாய
குணாட்யாய
கோசராய
அவித்யாமூலநாஶனாய
வித்யாவித்யா
ஸ்வருபிணே
ஆயுஷ்காரணாய (50)
ஆபதுர்த்தர்த்ரே
விஷ்ணுபக்தாய
வஶினே
விவிதாகமவேதினே
விதிஸ்துத்யாய
வந்த்யாய
விருபாக்ஷாய
வரிஷ்ட்டாய
கரிஷ்ட்டாய (60)
வஜ்ராங்குஶதராய
வரதாய
அபயஹஸ்தாய
வாமனாய
ஜ்யேஷ்ட்டாபத்னீ
ஸமேதாய
ச்ரேஷ்ட்டாய நம:
மிதபாஷிணே
கஷ்டௌகநாஶகாய
ஆர்யபுஷ்டிதாய
ஸ்துத்யாய
ஸ்தோத்ரகம்யாய (70)
பக்திவஶ்யாய
பானவே
பானுபுத்ராய

ஓம் பவ்யாய
பாவனாய
தனுர்மண்டல
ஸம்ஸ்த்தாய
தனதாய
தனுஷ்மதே
தனுப்ரகாஶதேஹாய
தாமஸாய 80
அஶேஷஜனவந்த்யாய
விஶேஷபலதாயினே
வஶீக்ருத்ஜனேஶாய
பஶூனாம்பதயே
கேசராய
கசேஶாய
கனநீலாம்பராய
காடின்ய மனஸாய
ஆர்யகணஸ்துத்யாய
நீலச்சத்ராய (90
நித்யாய
நிர்குணாய
குணாத்மனே
நிராமயாய
நந்த்யாய
வந்தநீயாய
தீராய
திவ்யதேஹாய நவ:
தீனார்திஹரணாய
தைன்யநாஶகராய (100)
ஆர்யஜனகண்யாய
க்ரூராய
க்ரூரசேஷ்டாய
காமக்ரோதகராய
களத்ரபுத்ரஶத்ருத்வ
காரணாய
பரிபோஷித பக்தாய
பரபீதிஹராய
பக்தஸங்க மனோபீஷ்ட
பலதாய

சனி பகவான் முற்றிற்று ‖ சுபம் ‖

ஓர் அரிய வாய்ப்பு

ஜோதிடம் தபாலில் கற்கலாம்

தமிழ் / ENGLISH

தம்முடைய நாற்பத்தெட்டு ஆண்டுகளுக்கும் மேலான ஜோதிட அனுபவமும் பரம்பரைக் கலைஞானமும் பலருக்கும் பயன்படும் முறையில் தபால் மூலம் ஜோதிடம் கற்பிக்க டாக்டர் கே. என். சரஸ்வதி அவர்கள் ஓர் எளிய முறையை உருவாக்கி இருக்கிறார். இம்முறையில் ஜோதிடம் பயில 4 மாதங்கள் பிடிக்கும். ஒரே முறையாக எல்லா பாடங்களும் ரெஜிஸ்டர் தபால் மூலம் அனுப்பப்படும். பாடங்களுடன் வினாத்தாள்களும் சேர்த்து அனுப்பப்படும்.

4 மாத முடிவில் 'கடலங்குடி ஜோதிட ஆராய்ச்சி மையம்' என்ற அமைப்பின் சார்பில் அருமையான Diploma வழங்கப்படும். மாணவர்களுக்கு மட்டும் எங்களுடைய புத்தகங்கள் சலுகை விலையில் தரப்படும்.

அட்மிஷன் பாரத்துக்கும், கட்டணம், பாடத்திட்டம் முதலான எல்லா விவரங்கள் அடங்கிய Prospectus-க்கும் ரூ. 12.00 M. O. செய்யவும். English கோர்ஸுக்கான Prospectus வேண்டுவோர் ரூ. 15-00 M.O. செய்யவும்.

வெளி நாட்டோர் கட்டணம் முதலான எல்லா விவரங்களுக்கும் £ 1 British Postal Order அனுப்புக.

Prospectus-இன் விலையோ கல்வியின் கட்டணமோ முன்னறிவிப்பின்றி மாற்றப்படலாம். எனவே அவ்வப்போது நிலையைக் கேட்டறிந்து M.O./B.P.O. செய்க.

பின்குறிப்பு : டாக்டர் K. N. S-ன் ஜாதக பலன்களுக்கும் தொடர்பு கொள்க.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

Kadalangudi Astrological Research Centre
38, Natesa Iyer Street
Madras - 600 017
INDIA

Estd : 1920

ஒரிஜினல் காபிரைட் புத்தகங்கள் வெளியிடுவோர்

KADALANGUDI

PUBLICATIONS

38, Natesa Iyer Street
T. Nagar, Madras - 600 017
INDIA Phone : 4343406